# 'Siddha tradition an important part of U.T.'s spiritual legacy'



Chief Minister N. Rangasamy addresses a Siddha Day conference hosted by Sri Aurobindo Society recently. SPECIAL ARRANGEMENT

**The Hindu Bureau**
PUDUCHERRY

A strongly-rooted Siddha tradition is an important part of the spiritual legacy of Puducherry, according to Chief Minister N. Rangasamy.

Addressing a recent international conference on 'Siddhas: Mystic Cults, Symbolism and Spiritual Significances', hosted by the Sri Aurobindo Society and the Departments of Tourism and Art and Culture, Mr. Rangasamy said that Puducherry had several memorial sites of mystic-alchemists, which underscored the importance of Siddha in medicine.

He also noted the immeasurable value of the teachings of Sri Aurobindo and The Mother that influenced the thoughts of millions of adherents of their spiritual philosophy.

Tourism Minister K. Lakshminarayanan said what made Puducherry such a unique place, and a hub of spiritual tourism, was its evolution over centuries as a convergence point of enlightened seers.

Sivagnana Balaya, of the Mailam Bommapura Atheenam, spoke on various topics.

**Intangible to the world**

Pradeep Narang, SAS chairman, highlighted the views of Sri Aurobindo and said that Siddha tradition has given something intan

Kishor Kumar Tripathy, SAS member secretary, said the tradition of the Siddha culture involves various rituals that blend spiritual practices with healing.

Highlighting the vision of Sri Aurobindo on the Siddhas, he said that the Siddha tradition also reflects traditional knowledge systems that has been passed down through generations.

Charu Tripathy, associate director, AuroBharati, SAS, presented a report of the ongoing project in documenting the Siddha heritage. Sri-La-Sri Kanagasbai, Swamigal Ambalathadum Swamigal Thiru Madom also spoke.

Research on the unexplored areas related to the Siddha system, preservation, and community outreach activities were part of the deliberations among scholars and stakeholders. Some of the SAS's recommendations, including the nomination of Siddha heritage sites under World Heritage and Siddha Practices under the Intangible Cultural Heritage, were also discussed at the meet.

Among those who took part in the valedictory of the two-day event was Jayanta Kumar Ray, secretary, government of Puducherry; K. Tharanikkarasu,vice-chancellor (i/c), Pondicherry University; and V. Kaliaperumal, director, department of art &



# புரட்சித் தொண்டன்

PURATCHI THONDAN

தர்மம் வெல்லும்

தர்மத்தின் குரலாக — தரவுகளின் குவியலாக

தினசரி நாளிதழ்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் : 1 இதழ் : 131<br>Volume : 1 Issue : 131 | சென்னை<br>Chennai | நிறுவனர் : ஓ. பன்னீர்செல்வம்<br>Founder : O.Panneerselvam | செவ்வாய், ஜனவரி 2, 2024<br>Tuesday, January 2, 2024 | 8 பக்கம்<br>8 Pages | ₹ 5 |



3 நடிகர் விஜய் உதவியாளர் கைது — 5 மணிப்பூரில் குண்டு வீச்சு — 6 மேற்கூரை இடிந்து 4 பேர் பலி — 8 சித்ரகுப்தன் கவிதை


# புதுவையில் சித்தர்கள் சர்வதேச மாநாடு

## முதலமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்



புதுச்சேரி, ஜன.2-

புதுச்சேரியில் நடைபெற்ற சித்தர்கள் சர்வதேச மாநாட்டை முதலமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்.

'சித்தர் தினத்தை முன்னிட்டு ஆரோ பாரதி, ஸ்ரீ அரவிந்தர் சொசைட்டி மற்றும் புதுச்சேரி அரசின் சுற்றுலாத் துறை, கலை மற்றும் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து சித்தர்களின் வழிபாட்டு மரபுகள் குறியீட்டமர்வு மற்றும் ஆன்மீக


முக்கியத்துவம்' என்ற தலைப்பின் கீழ் சர்வதேச மாநாடு புதுச்சேரியில் நடைபெற்றது. இம்மாநாட்டை முதலமைச்சர்ரங்கசாமி தொடங்கி வைத்தார். ஸ்ரீ அரவிந்தோசொசைட்டியின் தலைவர் ஸ்ரீ பிரதீப் நரங், ஸ்ரீ அரவிந்தரின் கருத்துக்களை எடுத்துரைத்து சித்த மரபு என்பது உலகுக்கு அருவமான ஒன்றை வழங்கிய பாரம்பரியம் என்று கூறினார். பாரம்பரிய அறிவு முறையின் முக்கியத்துவம் மற்றும் சமகால உலகத்திற்கான அதன் பயன்பாடு குறித்து ஸ்ரீநரங் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ அரவிந்தோசொசைட்டியின் உறுப்பினர் செயலாளர் டாக்டர் கிஷோர் குமார் திரிபாதி பேசுகையில், பாரம்பரிய சித்த கலாச்சாரத்தின் ஆன்மீக பழக்கங்கள் நல்வாழ்வை உள்ளடக்கியது என்பதைப் பற்றி பேசினார். சித்தர்கள் மீதான ஸ்ரீ அரவிந்தரது பார்வையை எடுத்துக்காட்டி சிறப்புக்கூறும் வகையில் சித்த பாரம்பரியம் தலைமுறைகளாக பாரம்பரிய அறிவு அமைப்புகளை பிரதிபலிக்கிறது என்பதையும், ஆன்மீக அம்சங்களை குணப்படுத்தும் நடைமுறைகளுடன் ஒருங்கிணைத்தமை பற்றியும், மற்றும் மனிதகுலத்தின் கலாச்சார மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தின் முக்கிய பகுதியாக இது கருதப்படுகிறது என்பதையும் கூறினார்.

திருக்கயிலாய பரம்பரை - மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆன்மிகத்தின் முக்கியத்துவம் மற்றும் சமூக நலனுக்கு ஆன்மிகம் எவ்வாறு உதவுகிறது என்பது போன்ற பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்.

அவர் இந்தியா முழுவதும் உள்ள பக்தி பாடல்களின் முக்கியத்துவத்தை விளக்கினார். நமது அன்றாட வாழ்வில் ஒழுக்கம் மற்றும் பொறுப்புகளின் அவசியத்தை எடுத்துரைத்தார். ஸ்ரீலஸ்ரீ கனக சபை சுவாமிகள், புதுச்சேரி அம்பலத்தாடும் சுவாமிகள் திரு மடம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# அப்பா பைத்திய சுவாமிகள் மகிமை எனக்கு தான் தெரியும்
# சித்தர்கள் மாநாட்டில் முதல்வர் ரங்கசாமி உருக்கம்



■ புதுச்சேரி அரபிந்தோ சொசைட்டியில் நடந்த சித்தர்கள் சர்வதேச மாநாட்டினை முதல்வர் ரங்கசாமி துவக்கி வைத்து பேசினார். அருகில் அமைச்சர் லட்சுமிநாராயணன், மயிலம் பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள், அம்பலத்தடையார் திருமடம் கனசபை சுவாமிகள்.

**புதுச்சேரி, டிச. 30–**

அப்பா பைத்திய சுவாமிகள் மகிமை எனக்கு தான் தெரியும் என முதல்வர் ரங்கசாமி பேசினார்.

புதுச்சேரி சுற்றுலாத் துறை,கலைபண்பாட்டு துறை,அரவிந்தர் சொசைட்டி சார்பில் சித்தர் பற்றிய இருநாள் சர்வதேச மாநாடு நேற்று துவங்கியது. மார்ட்டின் வீதியில் துவங்கிய மாநாட்டிற்கு அரவிந்தோ சொசைட்டி தலைவர் பிரதீப் நராங் தலைமை தாங்கினார்.

உறுப்பினர் செயலர் கிஷோர் குமார் திரிபாதி வரவேற்றார்.சிறப்பு அழைப்பாளர்களாக முதல்வர் ரங்கசாமி, அமைச்சர் லட்சுமிநாராயணன், மயிலம் பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள், அம்பலத்தடையார் திருமடலம் கனசபை சுவாமிகள், அரசு செயலர் மணிகண்டன்,சென்னை சித்தா ஆராய்ச்சி கவுன்சில் இயக்குனர் மீனாகுமாரி,கலை பண்பாட்டு துறை இயக்குனர் கலியபெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் முதல்வர் ரங்கசாமி பேசும்போது,சேலத்தில் பீடி சாமியார்(அப்பா பைத்திய சுவாமி)இருப்பார்.அவர் அருளை பெற அனைவரும் செல்வர். திடீரென அவர் தான் பிடித்த பீடியை கீழே போடுவார். அதை அவர் அனுமதியுடன் தான் எடுக்க முடியும். அவர், யாருக்கு கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றாரோ அவருக்கு கொடுப்பார். அதனை எடுத்து வீட்டில் கொண்டு போக சொல்லுவார்.


என்னடா இது,அவர் பீடியை கொடுக்கின்றாரே என பலருக்கும் தோன்றும்.ஆனால் அதனுடைய மகிமை அதனை பெற்று வீட்டில் வைப்பவர்களுக்கு தான் தெரியும். அதன் பிறகு எல்லாமே சுகமாக அமையும். அந்த மகிமையை நானும் உணர்ந்தவன். சித்தர்கள் நம் பக்கத்திலே இருப்பார்கள்.நம்மை கடந்து செல்லுவார்கள். ஆனால் நாம் தான் பார்க்காமல் இருக்கின்றோம். ஆனால் அவர்கள் நம்மை பார்த்து கொண்டு தான் இருப்பார்கள்.

நானும் அப்பா பைத்திய சுவாமிகள் மீது தீவிர பற்றுள்ளவன். அவர் மகிமை எனக்கு தான் தெரியும். புதுச்சேரியில் 40க்கும் மேற்பட்ட சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். ஆன்மிக சித்தர்கள் கொண்ட புண்ணிய பூமி புதுச்சேரி. என குறிப்பிட்டார்.

அமைச்சர் லட்சுமிநாரா யணன் பேசும்போது,சித் தர்களை பற்றி நாம் நிறைய பேசுகிறோம்.புது சேரி முதல்வர் ரங்கசாமி யும் வாழும் சித்தராகவே உள்ளார்.மக்களை பற்றி மட்டுமே யோசிக்கிறார் வாழும் சித்தரை புதுச்சேரி பெற்றுள்ளது பெருமையா னது என்றார்.

தொடர்ந்து நடந்த சிறப்பு அமர்வுகளில் புதுச் சேரியின் சித்தர்கள் குறித்து பல்வேறு ஆய்வு கட்டுரை கள் சமர்பித்து விவாதம் நடந்தது. மாநாடு இன்று இரண்டாம் நாளாக நட க்கின்றது.

கல்லூரி மாணவர்



# புதுவையில் சித்தர்கள் பற்றிய சர்வதேச மாநாடு

## முதல்-அமைச்சர் ரங்கசாமி பங்கேற்பு

புதுச்சேரி, டிச.30-
புதுச்சேரி சுற்றுலாத்துறை, கலை பண்பாட்டு துறை மற்றும் அரவிந்தர் சொசைட்டி சார்பில் சித்தர்கள் பற்றிய 2 நாள் சர்வதேச மாநாடு நடக்கிறது. இதன் தொடக்க விழா மார்ட்டின் வீதியில் அரவிந்தோ சொசைட்டியில் நேற்று நடந்தது. மாநாட்டிற்கு அரவிந்தோ சொசைட்டி தலைவர் பிரதீப் நராங் தலைமை தாங்கினார். உறுப்பினர் செயலர் கிஷோர் குமார் திரிபாதி வரவேற்றார்.

முதல்-அமைச்சர் ரங்கசாமி, அமைச்சர் லட்சுமி நாராயணன், மயிலம் பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டனர்.

அம்பலத்தடையார் திருமடலம் கனசபை சுவாமிகள், அரசு செயலர் மணிகண்டன், சென்னை சித்தா ஆராய்ச்சி கவுன்சில் இயக்குனர் மீனாகுமாரி, கலை பண்பாட்டுத்துறை இயக்குனர் கலியபெருமாள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த மாநாடு இன்று (சனிக்கிழமை) நடக்கிறது.

MARUTI SUZUKI
YOU CANNOT MISS
Avail great **year-end offers** before the st
CREATE. INSPIRE.

# சித்தர் தினத்தை முன்னிட்டு சர்வதேச மாநாட்டை முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்



புதுச்சேரி, டிச.31-

'சித்தர் தினத்தை' முன்னிட்டு, ஆரோபாரதி, ஸ்ரீ அரவிந்தர் சொசைட்டி மற்றும் புதுச்சேரி அரசின் சுற்றுலாத் துறை – கலை மற்றும் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து, 'சித்தர்களின் வழிபாட்டு மரபுகள், குறியீட்டமர்வு மற்றும் ஆன்மீக முக்கியத்துவம்' என்ற தலைப்பின் கீழ் சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்தது.

ஸ்ரீ அரவிந்தோ சொசைட்டியின் தலைவர் ஸ்ரீ பிரதீப் நாங், ஸ்ரீ அரவிந்தரின் கருத்துக்களை எடுத்துரைத்து, சித்த மரபு என்பது உலகுக்கு அருவமான ஒன்றை வழங்கிய பாரம்பரியம் என்று கூறினார். பாரம்பரிய அறிவு முறையின் முக்கியத்துவம் மற்றும் சமகால உலகத்திற்கான அதன் பயன்பாடு குறித்து ஸ்ரீ நாங் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ அரவிந்தோ சொசைட்டியின் உறுப்பினர் செயலாளர் டாக்டர் கிஷோர் குமார் திரிபாதி பேசுகையில், பாரம்பரிய சித்த கலாச்சாரத்தின் ஆன்மீக பழக்கங்கள் நல்வாழ்வை உள்ளடக்கியது என்பதைப் பற்றி பேசினார். சித்தர்கள் மீதான ஸ்ரீ அரவிந்தரது பார்வையை எடுத்துக்காட்டி சிறப்புக்கூறும் வகையில் சித்த பாரம்பரியம் தலைமுறைகளாக பாரம்பரிய கூறினார். ஸ்ரீ அரவிந்தர் மற்றும் அன்னையின் போதனைகளுக்கு முதல்வர் மரியாதை செலுத்தி, அவர்களின் இயக்க வினைவினைப் பெருமைப் படுத்தினார்.

புதுச்சேரியில் சித்தர்களின் சமாதிகள் ஏராளமாக இருப்பதை அவர் கூறி, மருத்துவத்தில் சித்தர் மரபின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். முடிவில், சித்தர்களின் அருளை நம்பியே அனைத்தும் அமைகிறது என்றும் அவர் வலியுறுத்தினார்.

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆன்மீகத்தின் முக்கியத்துவம் மற்றும் சமூக நலனுக்கு ஆன்மீகம் எவ்வாறு உதவுகிறது என்பது போன்ற பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார். அவர் இந்தியா முழுவதும் உள்ள பக்திப் பாடல்களின் முக்கியத்துவத்தை விளக்கினார், நமது அன்றாட வாழ்வில் ஒழுக்கம் மற்றும் பொறுப்புகளின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

ஸ்ரீலஸ்ரீ கனகசபை சுவாமிகள், அம்பலத்தாடும் சுவாமிகள் திரு மடம், புதுச்சேரி, விழாவை சிறப்பித்தனர். ஸ்ரீ கே.லக்ஷ்மிநாராயணன் தனது உரையின் போது, புதுச்சேரி ஏன் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது என்பதனையும், பல மற்றும் அருவமான கலாச்சார பாரம்பரியத்தின் கீழ், சித்த பாரம்பரிய தளங்களை பரிந்துரைப்பது மற்றும் சித்த தளங்களைப் பாதுகாப்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஸ்ரீ அரவிந்தோ சொசைட்டி செய்தது இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் பங்குதாரர்கள் கலந்து கொண்டு சித்த பாரம்பரியம், சித்தர்களின் வழிபாட்டு மரபுகள், குறியீட்டமர்வு மற்றும் ஆன்மீக முக்கியத்துவம், சித்த மருத்துவம் மற்றும் சிகிச்சை முறை, சித்த மருத்துவ தாவரங்கள்: சூழலியல் பார்வைகள், சித்தர்களின் இலக்கிய பாரம்பரியம்: தேர்ந்தெடுக்கப்பட்ட சித்த கோவில்களின் பண்டிட்களின் பகுப்பாய்வு, சடங்குகள், பாரம்பரியங்கள் மற்றும் குறியீட்டமர்வுகள், சித்த பாரம்பரியம், கோவில்கள் மற்றும் சமூக கலாச்சாரம் பேணுதல் மற்றும் சித்த பாரம்பரியம் மற்றும் ஆன்மீக சுற்றுலா என பல்வேறு தலைப்புகளின் கீழ் உரையாற்றினர்.

இந்த பாராட்டு விழாவில் புதுச்சேரி அரசின் செயலாளர் டாக்டர் ஜெயந்தகுமார் ரே, ஐ.ஏ.எஸ்., பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர். தரணிக்கரசு,

தமிழ்நா

கருணைக்கர

ஆட்சி



Comment Highlight Draw Text Fill & Sign More tools

# ஆன்மிக சித்தர்களை கொண்ட புண்ணிய பூமி புதுச்சேரி: முதல்வர் ரங்கசாமி

**புதுச்சேரி, ஜன. 2-**

'சித்தர் தினத்தை' முன்னிட்டு, ஆரோபாரதி, ஸ்ரீஅரவிந்தர் சொசைட்டி மற்றும் புதுச்சேரி அரசின் சுற்றுலாத் துறை - கலை மற்றும் பண்பாட்டுத் துறையுடன் இணைந்து, 'சித்தர்களின் வழிபாட்டு மரபுகள், குறியீட்டமர்வு மற்றும் ஆன்மிக முக்கியத்துவம்' என்ற தலைப்பின் கீழ், டிச., 29, 30 ஆகிய தேதிகளில், சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன. ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டியின் தலைவர் ஸ்ரீ பிரதீப் நரங், ஸ்ரீ அரவிந்தரின் கருத்துக்களை எடுத்துரைத்து, சித்த மரபு என்பது உலகுக்கு அருவமான ஒன்றை வழங்கிய பாரம்பரியம் என்று கூறினார். பாரம்பரிய அறிவு முறையின் முக்கியத்துவம் மற்றும் சமகால உலகத்திற்கான அதன் பயன்பாடு குறித்து ஸ்ரீ நரங் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ அரவிந்தோ சொசைட்டியின் உறுப்பினர் செயலர் கிஷோர் குமார் திரிபாதி பேசுகையில், ''பாரம்பரிய சித்த கலாசாரத்தின் ஆன்மிக பழக்கங்கள் நல்வாழ்வை உள்ளடக்கியது,'' என்றார்.



இந்த நிகழ்ச்சியில், முதல்வர் ரங்கசாமி கலந்து கொண்டு பேசுகையில், ''சித்தர்கள் நம் பக்கத்தில் தான் இருப்பார்கள். நம்மை கடந்து செல்வார்கள். நாம் தான் அவர்களைப் பார்க்காமல் இருக்கிறோம். ஆனால் அவர்கள் நம்மை பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றனர்.

சேலத்தில் இருந்த பீடி சாமியாரைப் (அப்பா பைத்தியம் சுவாமிகள்) பார்த்து, அவரின் அருளைப் பெறுவதற்கு அனைவரும் செல்வார்கள். அவர் புகைத்துக் கொண்டிருக்கும் பீடியைதிடீரெனகீழே போடுவார். அந்தப் பீடியை அவருடைய அனுமதியுடன் மட்டும்தான் எடுக்க முடியும். அந்த பீடியை யாருக்கு கொடுக்க வேண்டும் என்று அவர் நினைக்கிறாரோ, அவருக்குதான் அதைக் கொடுப்பார். அதை எடுத்துச்சென்று வீட்டில் வைத்துக்கொள்ளும்படிச் சொல்வார். 'என்னடா இது... தான் புகைத்துப் போட்ட பீடியைக் கொடுக்கிறாரே' என்று பலருக்கும் தோன்றலாம்.

ஆனால் அந்த பீடியின் மகிமை, அதைப் பெற்று வீட்டில் வைத்திருப்பவர் களுக்குத்தான் தெரியும். அதை வீட்டில் வைத்த பிறகு, அனைத்தும் சுகமாகவே அமையும். அந்த மகிமையை நானும் உணர்ந்தவன்.

அப்பா பைத்திய சுவாமிகள் மீது தீவிரமான பக்தி உள்ளவன் நான். அவரின் மகிமை எனக்குத் தான் தெரியும். புதுச்சேரியில் 40க்கும் மேற்பட்ட சித்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆன்மிகச் சித்தர்களைக் கொண்ட புண்ணிய பூமி புதுச்சேரி,'' என்றார்.

இதில், அமைச்சர் லட்சுமி நாராயணன், மயிலம் பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள், அம்பலத்தடையார் திருமடம் கனகசபை சுவாமிகள், புதுச்சேரி அரசின் செயலர் ஜெயந்த குமார் ரே, பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கே.தரணிக்கரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





E.mail : samathuvam2021@gmail.com.
சமத்துவம்
படைப்போம்
1-1-24






# சித்தர்களின் வழிபாட்டுமரபுகள், குறியீட்டமர்வு மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் என்ற தலைப்பினைக் கொண்ட சர்வதேச மாநாடு

## முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்



'சித்தர்தினத்தை 'முன்னிட்டு, ஆரோ பாரதி, ஸ்ரீஅரவிந்தர் சொசைட்டி மற்றும் புதுச்சேரி அரசின் சுற்றுலாத்துறை-கலை மற்றும் பண்பாட்டுத்துறையுடன் இணைந்து, 'சித்தர்களின் வழிபாட்டு மரபுகள், குறியீட்டமர்வு மற்றும் ஆன்மீக முக்கியத்துவம்' என்ற தலைப்பின் கீழ் 2930 டிசம்பர் 2023) சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்தது.

ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டியின் தலைவர் ஸ்ரீபிரதீப்நரங், ஸ்ரீஅரவிந்தரின் கருத்துக்களை எடுத்துரைத்து, சித்த மரபு என்பது உலகுக்கு அருவமான ஒன்றை வழங்கிய பாரம்பரியம் என்று கூறினார். பாரம்பரியஅறிவு முறையின்முக்கியத்துவம் மற்றும் சமகால உலகத்திற்கான அதன் பயன்பாடு குறித்து ஸ்ரீநரங் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டியின் உறுப்பினர் செயலாளர் டாக்டர் கிஷோர் குமார் திரிபாதி பேசுகையில், பாரம்பரியசித்த கலாச்சாரத்தின்ஆன்மீக பழக்கங்கள் நல்வாழ்வை உள்ளடக்கியது என்பதைப் பற்றி பேசினார். சித்தர்கள் மீதான ஸ்ரீஅரவிந்தரது பார்வையைஎடுத்துக் காட்டி சிறப்புக் கூறும் வகையில் சித்த பாரம்பரியம் தலைமுறைகளாக பாரம்பரிய அறிவு அமைப்புகளை பிரதிபலிக்கிறது என்பதையும், ஆன்மீக அம்சங்களை குணப்படுத்தும் நடைமுறைகளுடன் ஒருங்கிணைத் தமைப் பற்றியும், மற்றும் மனிதகுலத்தின் கலாச்சார மற்றும் ஆன்மீகபாரம் பரியத்தின் முக்கிய பகுதியாக இதுகருதப்படுகிறது என்பதையும் கூறினார்.

புதுச்சேரி அரசின் முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள் பார்வையாளர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துதனது உரையைத் தொடங்கினார். ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த புதுச்சேரியின் இந்த செழுமைக்கு காரணமான ஒன்று அருள் என்று அவர் கூறினார். ஸ்ரீஅரவிந்தர்மற்றும்அன்னையின் போதனைகளுக்கு முதல்வர் மரியாதை செலுத்தி, அவர்களின் இயக்க விளைவினைப் பெருமைப்படுத்தினார்.

புதுச்சேரியில் சித்தர்களின் சமாதிகள் ஏராளமாக இருப்பதை அவர் கூறி, மருத்துவத்தில் சித்தர் மரபின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். முடிவில், சித்தர்களின் அருளை நம்பியே அனைத்தும் அமைகிறது என்றும் அவர் வலியுறுத்தினார்.

திருக்கயிலாயபரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீசிவஞான பாலய சுவாமிகள் ஆன்மிகத்தின் முக்கியத்துவம் மற்றும் சமூக நலனுக்கு ஆன்மிகம் எவ்வாறு உதவுகிறது என்பது போன்ற பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார். அவர் இந்தியா முழுவதும் உள்ள பக்திப் பாடல்களின் முக்கியத்துவத்தை விளக்கினார், நமது அன்றாட வாழ்வில் ஒழுக்கம் மற்றும் பொறுப்புகளின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

ஸ்ரீ ல ஸ்ரீ கனகசபைசுவாமிகள், அம்பலத்தாடும் சுவாமிகள் திருமடம், புதுச்சேரி, விழாவைசிறப்பித்தனர். ஸ்ரீகே.லக்ஷ்மி நாராயணன் தனது உரையின் போது, புதுச்சேரி ஏன் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது என்பதனையும், பல மதிப்பிற்குரிய மகான் களை இந்நகரம் எவ்வாறு ஒருங்கிணைக்கும் புள்ளியாக செயல்பட்டு வருகிறது என்பதைப் பற்றியும் பேசினார். அவர் புதுச்சேரியை "ஆன்மீகபூமி"என வழங்கி, ஆன்மீகசுற்றுலாஎன்ற தலைப்பினையும் எடுத்துரைத்தார். அனைவருக்கும் இனியபுத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்து தனது உரையைநிறைவுசெய்தார்.

ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டியின் ஆரோபாரதியின் இணை இயக்குநர் சாருதிரிபாதி, சித்தபாரம்பரியத்தை ஆவணப்படுத்துவதற்கான தற்போதைய திட்டத்தின் சுருக்கமான அறிக்கையை வழங்கினார். யுனெஸ்கோவின் உலக பாரம்பரியம் மற்றும் அருவமான கலாச்சாரபாரம் பரியத்தின் கீழ், சித்தபாரம்பரியதளங்களை பரிந்துரைப்பது மற்றும் சித்ததளங்களைப் பாதுகாப்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டி செய்தது இங்கே குறிப்பிடத் தக்கது.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் பங்குதாரர்கள் கலந்து கொண்டு சித்தபாரம்பரியம், சித்தர்களின் வழி பாட்டு மரபுகள், குறியீட்டமர்வு மற்றும்ஆன்மீகமுக்கியத்துவம், சித்த மருத்துவம் மற்றும் சிகிச்சை முறை, சித்த மருத்துவதாவரங்கள்: சூழலியல் பார்வைகள், சித்தர்களின் இலக்கிய பாரம்பரியம்: தேர்ந்தெடுக்கப்பட்ட சித்தகோவில்களின் பண்டிட்களின் பகுப்பாய்வு, சடங்குகள், பாரம்பரியங்கள் மற்றும் குறியீட்டமர்வுகள்', சித்த பாரம்பரியம், கோவில்கள் மற்றும் சமூககலாச்சாரம் பேணுதல் மற்றும் சித்த பாரம் பரியம் மற்றும் ஆன்மீக சுற்றுலா என பல்வேறு தலைப்புகளின் கீழ் உரையாற்றினர்.

இந்தபாராட்டு விழாவில் புதுச்சேரி அரசின் செயலாளர் டாக்டர். ஜெயந்த குமார்ரே, ஐ.ஏ.எஸ்., பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (வீ/நீ) பேராசிரியர். கே. தரணிக்கரசு, டாக்டர்கிஷோர்குமார்திரிபாதி, உறுப்பினர் செயலாளர், ஆரோபாரதி, ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டி, ஸ்ரீஅரவிந்தோ சொசைட்டியின்ஆரோபாரதியின்இணைஇயக்குநர்திருமதிசாருதிரிபாதி, மற்றும்ஸ்ரீவி. கலியபெருமாள், இயக்குனர், கலை மற்றும் கலாச்சாரத்துறை, புதுச்சேரிஅரசு, ஆகியோர் கலந்து கொண்டனர். சித்தாஅமைப்பு தொடர்பான ஆராயப்படாத பகுதிகள் பற்றிய ஆராய்ச்சி, சமகால உலகில் பண்டைய அறிவுமுறையை மேம்படுத்துதல், பாதுகாத்தல்மற்றும்சமூகநலன்சார்ந்தசெயல்பாடுகள்ஆகியவை இம்மாநாட்டின்வாழ்த்துரையின்மையமாக அமைந்தது.




# பீடி சாமியாரின் அற்புதங்கள்

## முதல்-அமைச்சர் ரங்கசாமி உருக்கம்

புதுச்சேரி, டிச.30—

புதுவை சுற்றுலாத்துறை, கலை பண்பாட்டுத்துறை, அரவிந்தோ சொசைட்டி சார்பில் சித்தர்கள் பற்றிய 2 நாள் சர்வதேச மாநாடு நடந்தது.

அரவிந்தோ சொசைட்டி தலைவர் பிரதீப்நராங் தலைமை வகித்தார். உறுப்பினர் செயலர் கிஷோர்குமார் திரிபாதி வரவேற்றார். முதல்—அமைச்சர் ரங்கசாமி, அமைச்சர் லட்சுமி நாராயணன், பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள், அம்பலத்தடையார் திருமடம் கனகசபை சுவாமிகள், அரசு செயலர் மணிகண்டன், சென்னை சித்தா ஆராய்ச்சி கவுன்சில் இயக்குனர் மீனாகுமாரி, கலை பண்பாட்டுத்துறை இயக்குனர் கலியபெருமாள் ஆகியோர் பங்கேற்னறர்.

விழாவில் முதல்—அமைச்சர் ரங்கசாமி பேசியதாவது:—

### பீடி சாமியார்

சேலத்தில் அப்பா பைத்தியம் சுவாமிகளான பீடி சாமியார் இருப்பார். அவர் அருளை பெற அனைவரும் செல்வார்கள். திடீரென அவர் தான் பிடித்த பீடியை கீழே போடுவார். அதை அவர் அனுமதியுடன்தான் எடுக்க முடியும். அவர் யாருக்கு கொடுக்க வேண்டும் என நினைக்கிறாரோ அவருக்கு கொடுப்பார்.

### மகிமை

அதை வீட்டுக்கு கொண்டுபோக சொல்வார். பீடியை கொடுக்கிறாரே என பலருக்கும் தோன்றும். ஆனால் அதன் மகிமை வீட்டில் வைப்பவர்களுக்குத்தான் தெரியும். அதன்பிறகு எல்லாமே



சுகமாக அமையும்.

அந்த மகிமையை நானும் உணர்ந்தவன். சித்தர்கள் நம் பக்கத்திலே இருப்பார்கள். நம்மை கடந்து செல்வார்கள். ஆனால் நாம்தான் பார்க்காமல் இருக்கிறோம். அவர்கள் நம்மை பார்த்துக் கொண்டே இருப்பார்கள்.

### தீவிர பற்று

நானும் அப்பா பைத்தியம் சுவாமிகள் மீது தீவிர பற்றுள்ளவன். அவர் மகிமை எனக்குத்தான் தெரியும். புதுவையில் 40—க்கும் மேற்பட்ட சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். புதுவை ஆன்மிக பக்தர்கள் கொண்ட புண்ணிய பூமி.

இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் புதுவையின் சித்தர்கள் குறித்த பல்வேறு ஆய்வு கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டது.

மாலை மலர்
இணையதளத்தில் விளம்பரம் செய்ய தொடர்பு கொள்ளவும்:
73587 62747